பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

04 07 2024 **THURSDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சுவாமி விவேகானந்தரின் போதனைகள் கோடிக்கணக்கான மக்களுக்கு நம்பிக்கையையும் வளர்ச்சியையும் அளித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. அக்னி வீரர்களின் நலனில் மத்திய அரசு கூடுதல் அக்கறை செலுத்தி வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.

3. எல்லைப் பகுதிகளில் அமைதியை உறுதி செய்வது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில், கோவையில் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படுவதற்காக பரிந்துரைக்கப்பட்ட இடங்களில் ஆசிய முதலீட்டு வங்கி பிரதிநிதிகள் குழு இன்று ஆய்வு மேற்கொண்டது.

5. டிவென்டி டிவென்டி உலககோப்பையை வென்ற இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள், புதுதில்லியில் இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடியை நேரில் சந்தித்து வாழ்த்துகளை பெற்றனர்.

>>>><<<<<

விவேகானந்தரின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், சுவாமி விவேகானந்தரின் போதனைகள் கோடிக்கணக்கான மக்களுக்கு நம்பிக்கையையும், வளர்ச்சியையும் அளித்து வருவதாக தெரிவித்துள்ளார்.

அவரது ஆழ்ந்த ஞானமும், அறிவுத் தேடலும் இளையோருக்கு ஒரு முன்னுதாரணமாகவும், ஊக்கமளிப்பதாகவும் உள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், வளமான மற்றும் முன்னேற்றம் மிக்க சமூகம் அமைய வேண்டும் என்ற சுவாமி விவேகானந்தரின் கனவை பூர்த்தி செய்யும் வகையில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>><<<<<

அக்னி வீரர்களின் நலனில் மத்திய அரசு கூடுதல் அக்கறை செலுத்தி வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், அக்னி வீரர் அஜய் குமார் மறைவு தொடர்பாக வெளியான செய்திகளுக்கு பதிலளிக்கும் வகையில் ராணுவம் வெளியிட்டுள்ள பதிவினை பகிர்ந்துள்ளார்.

பணியின்போது உயிரிழந்த அக்னிவீரர் அஜய் குமாருக்கு உரிய நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவரது உயர்ந்த தியாகத்திற்கு ராணுவம் தலைவணங்குவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், அவரது இறுதிச் சடங்குகள் ராணுவ மரியாதையுடன் நடத்தப்பட்டது என்றும் அந்தப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>><<<<**

எல்லைப் பகுதிகளில் அமைதியை உறுதி செய்வது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக கஜகஸ்தான் சென்றுள்ள அவர், இன்று சீன வெளியுறவு அமைச்சர் திரு. **Wang Yi-**யை சந்தித்து பேசினார்.

அப்போது, எல்லைப்புற விவகாரங்களுக்கான தீர்வுகள் குறித்து இருவரும் பேசியதாகவும், எல்லைக்கட்டுப்பாட்டு கோட்டுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று தாம் தெரிவித்ததாகவும் தமது வலைதளப் பதிவில் திரு. ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா – சீனா இடையேயான ராஜதந்திர மற்றும் ராணுவ ரீதியிலான பேச்சுவார்த்தைகளை இரட்டிப்பாக்க இருதரப்பும் ஒப்புக் கொண்டதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**>>>><<<<**

தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்கள் மற்றும் தாலுகாக்களின் வளர்ச்சிப் பணிகளை உறுதி செய்யும் நோக்கில், சம்பூர்ணதா திட்டப் பிரச்சாரத்தை நித்தி ஆயோக் தொடங்கியுள்ளது.

இது இன்று முதல் வரும் செப்டம்பர் 30ஆம் தேதிவரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ், 112 மாவட்டங்களிலும், 500 தாலுகாக்களிலும் இது செயல்படுத்தப்படுகிறது.

கர்ப்பிணிப் பெண்களுக்கான ஊட்டச்சத்து பரிசோதனை, நீரிழிவு மற்றும் உயர் அழுத்த நோயாளிகள் கண்காணிப்பு, கர்ப்பிணிப் பெண்களின் முதல் மூன்று மாத மருத்துவ சோதனைகள், மண் பரிசோதனை, சுயஉதவி குழுக்களின் நிதி செயல்பாடு ஆகியவற்றில் சம்பூர்ணதா திட்டம் கவனம் செலுத்தும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்தின் கீழ், திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலை ஒன்றியத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாவட்டத்திற்கான திட்ட அலுவலர் திருமதி. மீனாம்பிகை எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மீனாம்பிகை 38 செகண்ட்ஸ்)

>>>><<<<<

பீகாரில் நடப்பாண்டிலிருந்து மருத்துவக் கல்வி, ஹிந்தி மொழியில் பயிற்றுவிக்கப்படும் என்று அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

மாநில அரசின் 10 மருத்துவக் கல்லூரிகள், மத்திய அரசின் 2 மருத்துவக் கல்லூரிகள் உட்பட 21 கல்லூரிகளில் இந்த வசதி செயல்படுத்தப்படும் என்று அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் திரு. மங்கள் பாண்டே தெரிவித்துள்ளார்.

ஹிந்தி மொழியில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள், மருத்துவக் கல்வி பயில்வதை ஊக்கப்படுத்தும் வகையிலும், அவர்கள் எளிமையாக மருத்துவம் கற்கும் வகையிலும், இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<<

தமிழக அரசின் திட்டங்கள் மூலம் பயன்பெற்ற பயனாளிகளுடன் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் காணொலி வாயிலாக இன்று கலந்துரையாடினார்.

சென்னை தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், நீங்கள் நலமா திட்டத்தின் கீழ் அவர்களது அனுபவங்களை முதலமைச்சர் கேட்டறிந்தார்.

>>>><<<<<

கோவையில் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படுவதற்காக பரிந்துரைக்கப்பட்ட இடங்களில் ஆசிய முதலீட்டு வங்கி பிரதிநிதிகள் குழு இன்று ஆய்வு மேற்கொண்டது.

மெட்ரோ பணிகளுக்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, முதலீடு செய்யும் நோக்கில் இக்குழு இந்த ஆய்வினை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நேற்று மதுரையில் மெட்ரோ ரயில் திட்டம் அமையவுள்ள இடங்களில் இக்குழு ஆய்வினை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

>>>><<<<<

பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை கட்டுப்பாட்டில் உள்ள ஏரி, குளங்களிலிருந்து வண்டல் மண், களிமண் உள்ளிட்டவற்றை விவசாயிகள், மண்பாண்டம் செய்வோர் இலவசமாக பெற்று, பயன்படுத்த இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதன்படி, திருப்பூர் மாவட்டத்தில் விண்ணப்பிக்க விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிப்பதற்கான வழிகாட்டுதல்களை மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – சபரிஷ் 50 செகண்ட்ஸ்)

>>>><<<<<

நடப்பாண்டு ரபி சந்தைப் பருவத்தில் விவசாயிகளிடம் இருந்து 266 லட்சம் டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக இந்திய உணவுக் கழகம் தெரிவித்துள்ளது.

குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்பட்டதன் மூலம் 22 லட்சம் கோதுமை விவசாயிகள் பயன் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓராண்டில் குறைந்த பட்ச ஆதரவு விலையில் நெல் மற்றும் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டதன் மூலம் ஒரு கோடியே 29 லட்சம் விவசாயிகள் பயன் அடைந்துள்ளதாகவும், அவர்களது வங்கிக் கணக்குகளில் இரண்டு லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் செலுத்தப்பட்டுள்ளதாகவும் இந்திய உணவுக் கழகம் கூறியுள்ளது.

>>>><<<<<

அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயக கட்சியின் அதிபர் வேட்பாளராக திரு ஜோ பைடன் மீண்டும் பரிந்துரைக்கப்படுவார் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

வெள்ளை மாளிகையின் செய்தி தொடர்பாளர் திருமதி. **Karine Jean-Pierre** செய்தியாளர்களை சந்தித்துப் பேசுகையில், அதிபர் பதவிக்கான போட்டியில் திரு. ஜோ பைடன் இருப்பதாக தெரிவித்தார்.

>>>><<<<<

காஸா பகுதியில், போரை நிறுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக இந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், இஸ்ரேல் – ஹமாஸ் அமைப்பு இடையே போர் நிறுத்தத்தை ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டு வரும் நாடுகளின் கருத்துக்களை ஹமாஸ் கேட்டறிந்து வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், போர் நிறுத்தம் தொடர்பான தங்களது கருத்துக்களையும் தெரிவித்துள்ளதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.

இதற்கிடையே, இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூ வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், சமாதான பேச்சுவார்த்தையை மேற்கொண்டுள்ள நாடுகள் மூலமாக, ஹமாஸ் அமைப்பின் வேண்டுகோள் தெரியவந்திருப்பதாக கூறியுள்ளார்.

போர் நிறுத்தம் தொடர்பான இஸ்ரேலின் கருத்துக்களை விரைவில் தெரிவிப்பதாகவும் திரு. நெத்தன் யாஹூ குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<<

நாட்டின் வடமேற்கு மற்றும் மத்தியப் பகுதிகளில் அடுத்த நான்கு நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உத்ராகண்ட் மாநிலத்தின் சில பகுதிகளில் இன்று முதல் 6-ஆம் தேதி வரை அதிகனமழை பெய்யக்கூடும் என்றும், உத்தரபிரதேசத்தின் சில பகுதிகளில் இன்று முதல் வரும் 8ஆம் தேதிவரை மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், ராயலசீமா, தெலங்கானாவின் சில பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

டிவென்டி டிவென்டி உலககோப்பையை வென்ற இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள், புதுதில்லியில் இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடியை நேரில் சந்தித்து வாழ்த்துகளை பெற்றனர்.

பிரதமர் இல்லத்தில் நடந்த இந்த சந்திப்பின் போது, அணி வீரர்கள் தங்களது அனுபவங்களை, பிரதமரிடம் பகிர்ந்து கொண்டனர்.

இன்று மாலை மும்பையில் நடைபெறும் வெற்றி விழா பேரணியில் இந்திய அணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

பின்னர் மும்பை வான்கடே மைதானத்தில், பிசிசிஐ சார்பில் நடத்தப்படும் பரிசளிப்பு விழாவிலும் அணி வீரர்கள் கலந்து கொள்கின்றனர்.

>>>><<<<

சீன ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>><<<<

கனடா ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரியன்ஷு ரஜாவத், அனுபமா உபாத்யாயா ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.